# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 4878/F/2024**

திரு.ப.விஜயகுமார் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம், .. பொது அதிகார அமைப்பு
எஸ்டேட் அலுவலகம்-2,
வியாசர்பாடி, சென்னை-600 039.

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.ப.விஜயகுமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திருமதி.சு.விஜயலட்சுமி, கண்காணிப்பாளர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், வியாசர்பாடி, சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், தாக்கல் செய்துள்ள மனுவில் தான் கடந்த 03.12.2024 தேதியில் தங்கள் அலுவலகத்திற்கு மனு அளித்திருந்ததாகவும் அதற்கான நிலையை அறிய வேண்டுவதாகவும் அது தொடர்பாக 8 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 24.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 27.06.2025 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்கவில்லை. இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 18(1)ன் கீழ் 12.10.2025 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 24.04.2025 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் 24.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை ஏற்று இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4878/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்,
தமிழ்நாடு நகர்ப்புற
வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
எஸ்டேட் அலுவலகம்-2,
வியாசர்பாடி, சென்னை-600 039.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை-600 081.

Copy to file: KR/PA